ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# எட்டுத்தொகையில் நெய்தல் நிலவாழ்க்கை முறை

மா. மணிகண்டன் & முனைவர்.வெ. சிவசங்கர்.

தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை

மின்னஞ்சல்: manichunampet@gmail.com, hodtamil@velsuniv.ac.in

## ஆய்வின் நோக்கம்

சங்க கால இலக்கியங்களில் சிறப்பானவை எட்டுத்தொகையும். பத்துபாட்டும். எட்டுத்தொகையில் நெய்தல் நிலம் சார்ந்து அகத்திணையைச் சேர்ந்த நற்றிணை, குறுந்தொகை, கலித்தொகை, ஐங்குறுநூறு, அகநானுறு என்ற ஐந்து நூலகளில் அதிக செய்திகள் உள்ளது. தமிழ்களின் உள்ளத்து உணர்ச்சிகளையும் , வேட்கைகளையும் புலப்படுத்துவதற்கு இயற்கையைப் பின்னனியாகச் கொண்டு பாடப்பட்டவை சங்க இலக்கியங்கள் , தங்கள் வாழிடங்களுக்குக்கேற்ப, அக்காலத்தில் காணப்பட்ட தாவரங்கள் , விலங்கள், பறவைகள், தொழில், விழாக்கள், சடங்குகள், உணவுமுறை போன்றவற்றை எட்டுத்தொகையில் உள்ள சங்கப்பாடலில் பதிவுசெய்துள்ளனர். அகப்பொருளினை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என பிரிப்பர். முதற்பொருள் என்பது நிலமும் , பொழுதும், நிலத்தினை ஐந்திணையாக குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என பிரிப்பர். அவர்கள் வாழும் இடதகவமைப்பிற்கு ஏற்ப நிலங்கள் பிரிக்கப்பட்டன. பொழுதினை பெரும் பொழுது , சிறுபொழுது எனவும். பெரும்பொழுது என்பது வருடத்தின் பன்னிரெண்டு மாதங்களும், சிறுபொழுது என்பது ஒரு நாளின் கூறுகளையும் குறிக்கும். கருப்பொருள் என்பது பல்வேறு நிலங்களில் வாழும் மக்களின் தெய்வம் , உணவு போன்ற அவர்க்களின் பழக்க வழக்கங்களை குறிக்கிறது. உரிப்பொருள் என்பது மக்கள் நிகழ்த்தும் ஒழுக்கமே உரிப்பொருள் ஆகிறது. பண்டைய தமிழ் இலக்கியஙகள் ஐந்து திணைகளின் நிலப்பகுதிகள் சார்நத கருப்பொருள்களிலே அமைந்திருந்தன அவற்றில் அந்தந்த நிலப்பகுதிக்குரிய ஓழுக்கங்களும் இடம் பெற்றிருந்தன. எட்டுத்தொகை நூல்களில் காணப்படும் அகம்சார்ந்த நெய்தல் நிலம் மக்களின் வாழ்க்கை முறை எப்படிப்பட்டது என்பதே ஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு சுருக்கம்

அகப்பொருளில் உள்ள நிலமும் , பொழுதில் நெய்தல் சார்ந்த இடத்தில் நெய்தலுக்குரிய பொழுது எற்பாடு ஆகும். ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய கருப்பொருளினை பற்றியம் கூறப்பட்டுள்ளது. நெய்தல் திணைக்குரிய உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமிர்த்தமும் ஆகும். நெய்தல் திணையின் பொழுது பற்றியும் , கருப்பொருள் பற்றியும் , சிற்றில் கட்டி விளையாடுதல் , கூடல் இழைத்தல் , இயற்கையுடன் உறவு கொள்ளுதல் பற்றியும் ஆராயப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்**

நெய்தல்,வாழ்வு,வரைவு,இரக்கம்,எற்பாடு,புன்னை,தாழை,ஊதை

**முன்னுரை:-**

தொல்காப்பியர் கடலும் கடல் சார்நத இடத்தினையும் நெய்தல் எனக் குறிப்பிடுவார் கடல் இணைபிரிந்தவர்க்கு மேலும் துன்பத்தை மிகுவிக்கும் களமாக உள்ளது. கடலின் ஒயாத அலைகள் கடற்காற்று இவ்வெண்ணத்தை மேலும் கிளர்ச்சியுறச் செய்கிறது.

காதலில் பிரிந்தவர்க்குத் துன்பம் இயல்பாகவே மிகுதியாக எழும். அப்பிரிவுத்துயாின் இரக்கவுணர்வினைப் புலப்படுத்துவதற்கு ஏற்ற களமாகக் கடலும் கடல் சார்ந்த இடமும் அமைகின்றது.

**பொழுது:-**

தலைவணைப் பிரிந்த தலைவிக்குக் கடலும் கானலும் காணுந்தோறும் இரக்கம் மிகுதலால், கடலையும் கடலைச் சார்ந்த இடத்தையும் நெய்தல் என்றார் அன்றியும் கடற்கரைக் கழிகளில் நெய்தல் மலர் சிறந்து விளங்குவதால் நெய்தல் எனப் பெயர் வந்ததாகக் கொள்ளலாம். இக்கடற்கரையில் இரக்கம் மிகுந்து தோன்றும் நேரம் சுடர்படும் பகலின் இறுதிக்காலமாகும் இரைதேடிய பின் பல்வேறு வகைப்பட்ட பறவையினங்கள் தத்தம் கூடுநோக்கித் திரும்பி வருதலும் , புன்னை, தாழை முதலிய பூக்களின் மணம் பரவுதலும் இரங்கற் பொருள் தோன்றுதற்குக் காரணமாகின்ற பொழுது சுடர்படு வீழ்பொழுது அல்லது ஞாயிறு வீழ்பொழுது ஆகும். இதனையே இலக்கண ஆசிரியர்களால் எல்+சூரியன் , படு-படுதல் எனக் குறித்தனர் இது நெய்தல் திணைக்குரிய சிறுபொழுதாகும்.

"…………………………எற்பாடு
நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்"
(தொல்-அகம் நூ.8)

என்றும் நுற்பா வேனில் காலத்தையும் , ஞாயிறு வீழ் பொழுதையும் நெய்தலுக்குரியதாகக் குறிப்பிடுகின்றது.

**கருப் பொருள்:-**

ஒப்வொரு நிலத்திற்கே உரிய வினைபொருள்கள் கருப் பொருள்களாகும்.

"……………………நுரைத்தொகையும்"
முத்தும் சிந்திப் புடைசுருட்டி" (பா.6193: 6)
முரல் முறுவல் குறிகாட்டி
முத்தே ! உயிரை முடிப்பாயோ ? (பா.6193 : 8)

என்று இடங்களில் கடலின் வினைபொருளான முத்து எனக் குறித்துள்ளதனைக் காணலாம்.

**உரிப்பொருள்:-**

நெய்தல் திணைக்குரிய உரிப்பொருள் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் ஆகும். காலைப்பொழுதில் இரைதேடச் சென்ற விலங்குகளும் , பறவைகளும் தத்தம் துணைநாடித் திரும்பி வருதலையும் , மாலை வேளையில் தோன்றும் நிலவின் எழிலையும் கண்ட தலைவி தன்னைப் பிரிந்து சென்ற தலைவனை நினைத்து வருந்துவாள். இரவில் ஊரல்லாம் துஞ்சும் நிலையில் இருக்க தான் மட்டும் ஊரே தூங்காது இருப்பதும் , அந்நிலையில் கடல் அலையின் ஒசையும் ,அன்றிற் பறவையின் குரலும் அவள் துயரத்தை மேலும் மிகுதியாக்குதலும் இயற்கையான நிகழ்வாகும் என்று கூறுவர். இங்கு தலைவியின் மீதுற்ற காதலால் தலைவன் துயிலாது விழித்திருப்பது அறியத்தக்கதாகும்.

கானவஞ்சோலை: ஞாயிறு மலையிற்படும் மாலை (இதனையே எற்பாடு என்பர் இலக்கண நூலோர்) எதிரே ஒவென ஒலமிடும் நீலக்கடல் , அக்கடலும், கழியும், கானலும் தனிமையைப் பிரதிபலித்து கொண்டிருக்கும் புள்ளின மெல்லாம் தம்புகலுக்குத் திரும்பும் துன்பம் தவழும் சூழ்நிலையே சுற்றிலும் காணும்.

ஆங்கே சோகமே உருவெடுத்த தலைவி தோழியின் துணையுடன் வந்து தன் காதலனின் வருகைக்காக காத்துக் கிடப்பாள் , அவன் வாராமையை எண்ணியெண்ணிக் கண்ணீர் அறுப்பெருக்க அழுது புலம்புவாள் உற்றுழியதவும் அவள் உயிர்த் தோழி பலவாறு ஆறுதல் கூறிக் தேற்றுவாள். நேரம் கடத்தும் தலைவன் வராதிருக்கும் காரணங்களை நினைந்து நினைந்து தலைவி மேலும் கவல்வாள் கலங்குவாள் அவன் வரும் வழியின் ஏக்கத்தினை எண்ணி ஏங்குவாள் சிற்சிலகால் இடையீடுகளால் குறிப்பிட்டபடி சந்திக்க இயலாமல் போகும் சங்கடநிலை குறித்துக் குமுறிக் குமைவாள் தலைவனும் ஒரவழி அல்ல குறியாலும் இடையீட்டாலும் ஏமாற்றம் அடைந்து அல்லலுற்று இறங்குவான்.

இப்பிரிவிக் துயரததுக்கு முத்தாய்ப்பு வைத்தது போன்று அந்தச் சூழலின் இயற்கை நிகழ்சிகளும் ஒத்துக் தோன்றுவது வியப்பினையே மிகுவிக்கும்.

பிரிவால் வாடிப் பேதுறும் தலைவியின் பின்புறத்தே ஒற்றைப் பனை மரத்தில் ஆண் அன்றிலைப் பறிகொடுத்து விட்டுத் தன் பச்சினம் பார்ப்பினை அணைத்துக் கொண்டு நரலும் அன்றிற் பேடையின் பரிதாபக் காட்சி!

எதிரே ஒலமிடும் பேரலைகள் வீசியெறியும் மீன்களைக் கவ்விக் கொண்டு விரைந்து அயவிலுள்ள வாயிற் புறத்தில் , தலைச் சூலால் வயஉற்று வருந்தும் பெண் நாரைக்குப் பெட்புடன் ஊட்டிக் திரும்பி வரும் ஆண் நாரையின் பாச உணர்வு !

அருகில் உள்ள கரு நாவல் மரத்தடையில் , வளைமின் வாயிலில் காத்து நிற்கும் காதல் படைநண்க்குக் கனி ஒன்றனை உருட்டிச் சென்று கனியுடன் அளித்துக் களிக்கும் அளவனின் அக்கறை!

தாழையில் ! மனம் வீசும் மலரின்றும் பிரித்கூறியதாபடி காத்து நிற்கும் பெண் கொக்கிற்கு துடிக்கம் இறளை மிடுக்குடன் பற்றிச் சென்று அளகைப் பிளந்து மொட்டும் ஆண்கொக்கின் ஆர்வம்!

வெண்மணல் பரப்பில் , அடுப்புக் கொடியைச் சீய்த்து , பெண்யாமை இட்டு வைத்த முட்டைகளை , ஆதரவோடு அடைகாத்துக் கிடக்கும் ஆண் யாமையின் பொறுப்புணர்ச்சி !

பகலெல்லாம் கணன்று காய்ந்த கதிரவனின் வெண்மையைக் தாங்காது தவிக்கம் தன் நிலக் காதலியை தழுவித் தன்மை ஊட்டத் தென்றல் தோழியையும் உடன் அழைத்து கொண்டு , நுரைசிந்த விரைந்தோடி வரும் திரைக் கடலின் பரிவுணர்ச்சி

இவையனைத்தும் தலைவியின் பிரிவு கடுங் கனலில் பொய்யும் நெய்யாய்த் துயர்சி செய்யும் அன்றே!

**நெய்தல் திணையின் இயல்புகள்:-**

வரைவு கடாவுதல் (மணம் செய்து கொள்ளுமாறு வேண்டுதல்) வரைவு நீட்டித்தல் , பகற்குறி, இரவுக்குறி போன்ற அகவாழ்க்கை நிகழ்வுகள் குறிஞ்சியில் உள்ளது போல் நெய்தலிலும் உண்டு அகநிகழ்வு அல்லாத நெய்தலுக்கே சிறப்பாக உரிய சில சிகழ்வுகளையும் காண முடிகின்றது. அவற்றுள் சிற்றில் கட்டி விளையாடல்,கூடல், இழைத்தல், மீன் உணக்கல் , மீன்கறி ஆக்கல் , இயற்கையையும் உறவாக நினைத்தல், மடலேறுதல் போன்றவை குறிக்கத்தக்கன இவை அகவாழ்க்கை நிகழ்வுகளோடு இணைத்துச் சொல்லப்படுகின்றன.

**சிற்றில் கட்டி விளையாடல்:-**

கடற்கரை மணலில் இளம்பெண்கள் வீடுகட்டி விளையாடுவதைச் சிற்றல் கட்டி வியைளாடல் என்பர். தலைவியை மணந்து கொள்வதில் கருத்தின்றிப் பகலில் மீண்டும் மீண்டும் தலைவியைக் காண வருகிறான் , தலைவன் இதனை அன்னை அறிந்தால் தலைவியை வெளியில் அனுப்பாமல் வீட்டில் இருத்தி விடுவாள் எனவே விரைவில் மணந்துகொள் என்கிறாள் அகநானூற்றுத் தோழி.

ஊதை ஈட்டிய உயர்மணல் அடைகரை
கோதை ஆயமொடு வண்டல் தைஇ
ஓரை ஆடினும் உயங்கும் நின் ஒளியென
(அகநானூறு -60) 9-11

ஊதைக் காற்றால் குவிக்கப்பட்ட உயர்ந்த மணற்குன்றை உடையது நீர்க்கரை அக்கரையில் மாலை அணிந்த தோழியருடன் சிற்றில் கட்டி விளையாடினாலும் உன் உடம்பின் ஒளி வாடும் அங்கு போகாதே "என்று சினப்பாள் தாய் அப்படிப்பட்ட தாய் உன் வருகையை அறிந்தால் தலைவியைக் காவலில் வைத்துவிடுவாள் " என்று தோழி கூறுகிறாள்.

**கூடல் இழைத்தல் :-**

மணலில் பொ◌ிதாக வட்டங்கள் வரைந்து அவை இரட்டைப் படையில் அமைந்தால் தலைவன் வருவான் என்ற நம்பிக்கை நெய்தல் நிலப் பெண்களிடம்

இருந்தது. மேலும் கண்ணை மூடி வட்டம் இழைக்கும்போது மணல் வட்டம் கூடாமல் போவதுண்டு கூடாமல் போனாலோ அல்லது வட்டங்கள் ஒற்றைப் படையில் அமைந்தாலோ தலைவனின் வருகை இல்லை என்று நம்பினர்.

**இயற்கையுடன் உறவு கொள்ளல்:-**

நெய்தல் நில மக்கள் இயற்கைப் பொருள்களையும் உறவாக நினைப்பார்கள் புன்னை மரத்தை உறவாக நினைத்த நெய்தல் மகளிரை நற்றிணைப் பாடலில் காணலாம்.

" நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொரு நகையே

-நற்றிணை 172 ; 4-7

**அம்மூவனுர்**

ஐங்குறு நூற்றில் நூறு பாடல்கள் கொண்ட நெய்தல் திணை முழுவதையுமே பாடியுள்ளார் அம்மூவனுர் நற்றிணை குறுந்தொகை, அகநானூறு என்ற அகப் பொருள் இலக்கியங்களிலும் தனிப்பாடல்கள் பல பாடியுள்ளார்.

இவரது இயற்பெயர் மூவன் எனபது , அடைமொழி புணர்த்தி அம்மூவனுர் என வழங்கப்பட்டதாக. எனக் கருதலாம் இவர் தொண்டி , மாந்தை முதலிய சேர நாட்டு ஊர்களைக் தம் பாடல்களில் அடிக்கடி சிறப்பித்துப் பாடியிருப்பதால் இவர் மேலைக் கடற்கரை நாட்டினராய் இருக்கலாம் எனத் தோன்றுகிறது.

**நல்லந்துவனர்**

கலித்தொகையின் அமைப்பு முறையும் அதில் இணைந்துள்ள இசைநயமும் , நேரிய நடையும் , சீரிய தொடையும் உள்ளத்தில் இறவாத இன்ப ஊற்றினைக் கல்வி விடுகின்றன. முதல் , கரு, உரி ஆகிய முப்பொருள்களையும் முழுமையாய் இனிதாக்கி நாடகப் பாங்கில் எடுத்துக் காட்டுகளை நம் மணக்கன் முன் கொண்டு வந்து நிறுத்தி , நிலை பெறச் செய்யும் இணையற்ற இலக்கியம கலித்தொகை.

நெய்தல் கவியின் ஆசிரியர் நல்லந்துவனர். இவர் இயற் பெயர் அந்துவன் என்பது இவரது புலமை நலம் , சான்றாண்மை, பெருமை முதலிய உயர்பண்புகளைக் கருதி, அவற்றைச் குறிக்கும். ந என்ற இடைச் சொல்லை இறுதியிலும் பெய்து குறிக்கும் 'ஆர்' என்ற இடைச் சொல்லை இறுதியிலும் பெய்து நல்வந்துவனார் என வழங்குகின்றனர் நன்மை என்ற சொல்லை முதலில வைத்து நல்லந்துவனர் என்றும் வழங்குவதுண்டு.

**முடிவுரை:-**

நெய்தல் திணையின் முதற்பொருள் , கருப்பொருள், உரிப்பொருள் எவை எனவும் பாடல்களில் வெளிப்படும் முறை பற்றியும் விரிவாக கூறப்பட்டுள்ளது நெய்தல் திணையின் இயல்புகள் பற்றியும் , சிற்றில் கட்டி விளையாடுதல் , கூடல் இழைத்தல், இயற்கையுடன் உறவு கொள்ளல் ஆகிய நெய்தல் நிலத்தின் சிறப்புகளை பற்றி அறிந்து கொள்ள முடிந்தது.

**துணைநூல் பட்டியல்**

அதிரியான் கௌசானல். சே.சா – முத்துக் குளித்துறை மீனவர் வரலாறு

சிதம்பரம் சாமி - எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும்

ஜோ.டி.குருள் - கொற்கை, ஆழி சூழ் உலகு

ஜேம்ஸ் மாரிய ஆரோக்கியம் . த – பரதவர் வாழ்வியல்

முத்துக் கண்ணப்பன். தி – சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்

சாம்பசிவன். ச - சங்க இலக்கியத்தில் நெயதல் திணை

கே.கே. பிள்ளை தமிழக வரலாறும் மக்களும் பண்பாடும்